Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15    Date of Publication 25th of Every Month












Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# எக்காளம்

Vol. 6
Issue. 10

தனிப்பிரதி ரூ20/=
ஜூன் 2013





# கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிடுங்கள்

- சகோதரி. நிஜா கென்னடி

**கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்து விடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார் (சங்கீதம் 55:22).** நம்முடைய கவலைகளை கர்த்தரிடம் ஒப்படைத்து விடும்படி கர்த்தர் கூறுகிறார். கவலையிலிருந்து விடுதலைபெற நம் பாரங்களை கர்த்தரிடம் சொல்லிவிடவேண்டும். கர்த்தரிடம் நம் பாரங்களை இறக்கி வைத்துவிடும் போதுதான், அவர் நமக்கு உதவி செய்ய முடியும். நாம் செய்ய வேண்டிய காரியம் இதுதான், அவர் மேல் பாரத்தை வைத்துவிட வேண்டும். அப்பொழுது மற்ற காரியங்களை கர்த்தர் கவனித்துக் கொள்வார். யூதர்கள் தங்களால் சுமக்கமுடியாத பாரங்களை ஏற்றிச்செல்ல ஒட்டகங்களையும், கழுதைகளையும் பயன்படுத்தினார்கள். இதை அடிப்படையாக வைத்துத்தான், தாவீது இப்படியாகச் சொல்லுகிறான். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும் நிபந்தனையுள்ளவை. நாம் செய்ய வேண்டியவற்றை நிறைவேற்றும்போது, கர்த்தர் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர். கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிடுகிறவர்களின் எல்லா பிரச்சனைகளிலும் கர்த்தர் அவர்களுக்கு ஆதரவாயிருப்பார்.



பணத்தேவையோடு இருக்கிறீர்களா? யார் எங்களது தேவைகளை சந்திப்பார் என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? பிரியமானவர்களே! கவலைப்படாதீர்கள். கர்த்தர் உங்கள் தேவைகளையெல்லாம் சந்திப்பார். அவர் ஒருபோதும் உங்களை கைவிடவேமாட்டார். கர்த்தரிடம் உங்கள் தேவைகளை சொல்லிவிடுங்கள். நீங்கள் அதை நினைத்து கலங்கிக் கொண்டிராதேயுங்கள். அவர் உங்கள் தேவைகளையெல்லாம் சந்திப்பார். அவர் எல்லாவற்றையும் பார்த்துக்



கொள்வார். அவர் உங்களை போஷித்து, பராமரித்துக் காப்பாற்றுவார். நீங்கள் விழுந்துவிடாமல் உங்களை நிலை நிறுத்துவார். உங்களுக்கு ஆதரவாயிருப்பார். உங்களுடைய காரியங்களை எல்லாம் அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார்.

நீங்கள் செய்கிற காரியங்கள் எல்லாம் தடையாக இருக்கிறதா? முன்னேற முடியாமல் அதே நிலைமை யில் இருந்து கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய வாழ்க்கையில், படிப்பில், வேலையில், தொழிலில் வெற்றியைக் காணமுடியாமல் தோல்வியையே சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தரிடம் உங்கள் வாழ்க்கையை, படிப்பை, வேலையை, தொழிலை, செய்கிற அனைத்து காரியங்களையும் ஒப்புக் கொடுத்து விடுங்கள். அதைக்குறித்தே எப்போதும் நினைத்து கலங்கிக் கொண்டிராதேயுங்கள். எப்போதும் தோல்வியையே சந்தித்து வருவதினால் அவிசுவாசமான வார்த்தைகளையும், எதிர்மறையான வார்த்தைகளையும் பேசிக் கொண்டிராதேயுங்கள். விசுவாச வார்த்தையை பேசுங்கள். கர்த்தர்மேல் நம்பிக்கை வையுங்கள். கர்த்தர் உங்கள் தோல்வியை வெற்றியாக மாற்ற வல்லவராயிருக்கிறார் என்று விசுவாசித்து, அவரிடம் உங்கள் பாரங்களை இறக்கி வைத்துவிடுங்கள். அப்பொழுது அவர் உங்களை பொறுப்பெடுத்துக் கொள்வார். தொடர்ந்து தோல்வியையே சந்தித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு வெற்றியைத் தருவார்.

**நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார்** என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்ட ஒவ்வொருவரும், அவருடைய பிள்ளைகளாய், நீதிமான்களாய் மாறிவிடுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அவர் கொடுக்கும் ஆசீர்வாதமும், வாக்குத்தத்தமும் இதுவே. நம்முடைய வாழ்க்கையில் நாம் இதை நம்ப வேண்டும்.

தாவீது கர்த்தரிடம் தன் பாரங்களை இறக்கிவைத்தான். கர்த்தர் தனக்கு ஆதரவாயிருப்பார் என்றும், அவருடைய பிள்ளைகள் தோல்வியை காண்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்றும் விசுவாசித்தான். தாவீதோடுகூட இருந்து, அவனுக்கு ஆதரவாக இருந்தவர் நம்மோடுகூட இருந்து, நமக்கு ஆதரவாக இருப்பார். தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார். சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி நம்மை விடுவிப்பார்.

தாவீதின் சத்துருக்கள் அவனை ஒடுக்கினார்கள். துரோகம் பண்ணி, அவனைத் துன்பப்படுத்தினார்கள். அவன்மேல் பழிசாட்டி அவனைப் பகைத்தார்கள். பொல்லாதவர்களாகிய அவர்கள் அவனை மிரட்டி பயமுறுத்தினார்கள். அவனைக் கொன்றுபோடும்படி தேடினார்கள். இந்த இக்கட்டான வேளையிலும், தாவீது கர்த்தரை நோக்கி முறையிட்டான். விசுவாசத்தை விட்டுவிடவில்லை. **மரணத்திகில் என்மேல் விழுந்தது** என்று சங்கீதம் 55:4-ல் கூறுகிறான். எப்பொழுதும் தான் கொலை செய்யப்படலாம் என்று பயந்து கொண்டிருந்தான். தாவீதின் சொந்த மகனான அப்சலோம் தாவீதை கொன்றுபோடும்படி துரத்திச் சென்றான்.

தாவீதை ஆட்சியிலிருந்து

அகற்றிவிட்டு, அப்சலோமை ராஜாவாக்க சதி ஆலோசனை பண்ணினார்கள். தாவீதுக்கு வழிகாட்டியும், அவனுக்கு ஆலோசனைக்காரனான அகித்தோப்பேலே தாவீதைக் கொன்று போடும்படி அப்சலோமுக்கு ஆலோசனை சொன்னான் (சங்கீதம் 55:12). தாவீது கர்த்தரை நோக்கி இப்படியாக ஜெபித்தான்: **கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கி விடுவீராக என்றான்** (2 சாமுவேல் 15:31). கர்த்தர் தாவீதின்



ஜெபத்தைக் கேட்டார். தன் நண்பர்களே தனக்கு துரோகம் பண்ணின இக்கட்டான வேளையிலும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். கர்த்தர்மேல் தன் பாரத்தை வைத்துவிட்டு, அவர் தன்னை கைவிடமாட்டார், தனக்கு வெற்றியைத் தருவார் என்று விசுவாசத்தோடுகூட இருந்தான். கர்த்தர் அவனை மறுபடியும் ராஜாவாக்கினார். தாவீதைப்போல நம்முடைய வாழ்க்கையிலும் நம்மை நெருக்குகிற அனைத்து காரியங்களையும் கர்த்தரிடம் சொல்வோம். அவரிடம் நம் பாரங்களை இறக்கி வைக்க கற்றுக் கொள்வோம்.

உங்களோடுகூட இருந்த நண்பர்களே அல்லது உங்களுக்கு நெருக்கமானவர்கள் உங்களை பகைத்து உங்களுக்கு எதிராக நிற்கிறார்களா? அல்லது உங்களுக்கு எதிராக செயல்படுகிறார்களா? பயப்படாதீர்கள். கர்த்தர் உங்களோடுகூட இருக்கிறார். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். **உங்கள் சத்துருக்களுக்கு வரும் நீதிச்சரிக்கட்டுதலை காணும்படி செய்வார்** (சங்கீதம் 59:10). கர்த்தர் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக உங்களை உயர்த்துவார். கர்த்தர் உங்களோடுகூட இருப்பதை உங்கள் சத்துருக்கள் காணும்படி செய்வார். **ஒருவழியாய் உங்களுக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்: ஏழு வழியாய் உங்களுக்கு முன்பாக ஓடிப்போவார்கள்** (உபாகமம் 28:7). தாவீதைப்போல கர்த்தரிடம் பிரச்சனைகளைக் குறித்து முறையிடுங்கள். மனிதர்களிடம் போய் முறையிடவேண்டாம். கர்த்தரிடம் கவலைகளை வைத்து விடுங்கள்.

தாவீது ஜெபித்தபோது, அகித்தோப்பேலின் ஆலோசனையைக் கர்த்தர் ஆதமாக்கிப்போட்டது போல உங்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களின் ஆலோசனையைக் கர்த்தர் அதமாக்கி, ஒன்றுமில்லாமல் போகச் செய்வார்.

எதிர்காலத்தைக்குறித்து பயப்படுகிறீர்களா? இனி என் வாழ்க்கையில் என்ன நடக்கும் என்றும், செய்கிற வேலையை நன்றாக செய்து முடித்து விடுவேனா, படிக்கிற படிப்பை வெற்றியோடு முடித்து விடுவேனா? என்றும் பயப்படுகிறீர்களா? பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் கீழ்ப்படியாமல், தங்களை மதிக்காமல் போய்விடுவார்களோ, பாவத்தில் விழுந்துவிடுவார்களோ? பிள்ளைகளுடைய எதிர்காலம் எப்படி இருக்குமோ என்றும், வருமானமே



இல்லையே குடும்பத்தை எப்படி நடத்துவேன் என்றும், பலவீனங்கள், நோய்கள் தாக்கிவிடுமோ என்றும் பல காரியங்களை நினைத்து பயந்து வீணாக கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? பிரியமானவர்களே, பயப்படாதீர்கள். கர்த்தர்மேல் உங்கள் கவலைகளை வைத்து விடுங்கள். உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களோடுகூட இருக்கிறேன். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதில்லை என்று வாக்கு கொடுக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பேதுரு இப்படியாகக் கூறுகிறான்: **அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்** (1 பேதுரு 5:7). கர்த்தர்மேல் விசுவாசம் இல்லாதவர்கள் கவலைகளை சுமந்து திரிவார்கள். நாம் கர்த்தரை நம்பியிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, அவர்மேல் பாரத்தை வைக்காமல், அடிக்கடி நாமே எல்லாப் பாரங்களையும் சுமந்து கொண்டிருக்கிறோம். முழுபெலத்தோடு அவரையே நம்பும்பொழுது, நமது பாரங்களை அவரே சுமந்து கொள்வார். நம்முடைய பிரச்சனைகளை அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார். நமக்கு பாதுகாப்பாக இருப்பார். நம்மை கவனித்துக் கொள்வார். தேவைகளை எல்லாம் சந்திப்பார். நம் பிள்ளைகளை அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார். நோய்கள், பெலவீனங்கள் வராதபடி காத்துக்கொள்வார்.

கவலைகள், மனப்பாரங்கள், சோர்வுகள், அதிகமான வேலைப்பழுவினாலும், பிரச்சனைகளினாலும் வரும் மன அழுத்தங்கள், அனுதினமும் சந்திக்கும் நெருக்கங்கள், பாடுகள் எல்லாவற்றையும் நாமே சுமந்து கொண்டிருந்தோமானால், நாம் கர்த்தரை முழுமையாக நம்பி வாழவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். நாம் செய்த பாவத்தினால்தான் இப்படிப்பட்ட கஷ்டங்கள் நம் வாழ்க்கையில் வந்தது என்பதை நாம் உணர்ந்தால், உடனே நம்மை தாழ்த்தி நம் பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து மனந்திரும்புவோம். அனுதினமும் பாவத்தை விட்டுவிலகி கர்த்தரோடு ஐக்கியமாய் இருப்போம். அவரே சூழ்நிலையை கட்டுப்படுத்தும் உரிமையையும், திறனையும் உடையவராயிருக்கிறார். ஒவ்வொருநாளும் நாம் சந்திக்கும் காரியங்கள், சூழ்நிலைகள் எல்லாவற்றையும் கர்த்தர் ஆளுகை செய்யும்படியாக ஒப்புக்கொடுப்போம். அப்பொழுது கர்த்தர் நம் பாரங்களை ஏற்றுக் கொள்வார். போராட்டங்கள், இடர்பாடுகள், எதிர்ப்புகளின் மத்தியிலும் காரியங்களை எளிதாக செய்து முடித்துக் கொடுப்பார். சூழ்நிலைகள் சாதகமற்றுபோனாலும், கர்த்தர் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி, ஆளுகை செய்வார். சகல அதிகாரத்தையுமுடைய சர்வவல்லமையுள்ள தேவன் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் எல்லாவற்றையும் கொண்டு வருவார். அவரே சகலத்தையும் கையாளும் உரிமையை உடையவராயிருக்கிறார். சூழ்நிலையை கட்டுப்படுத்துகிறார். அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது, எல்லாவற்றையும் செய்து முடித்துக் கொடுப்பார். நம் எதிர்காலத்தை கர்த்தரிடம் ஒப்புக் கொடுப்

போம். எதிர்காலத்தைக் குறித்த பய உணர்வை எடுத்துப்போடுவார். நம் எதிர்காலத்தின்மீது, அவர் அக்கரையுள்ளவராயிருக்கிறார்.

சிலர், காரியங்கள் நடக்கவில்லை என்பதால் கவலைப்பட்டு, மற்ற வேலைகளில் முழுமையாக கவனம் செலுத்த முடியாமல் இருப்பார்கள். சிலர் பெரிய பொறுப்பில் இருப்பதால் அந்த பதவியே அவர்களுடைய மனக்கவலைக்கு காரணமாகி விடும். கடினமான வேலையாய் இருக்கிறதே என்ற எண்ணம் மனதை அழுத்திக் கொண்டேயிருக்கும். சிலர் வீணான சிக்கல்களில் மாட்டிக் கொண்டு மனக்கலக்கத்தோடு கவலையோடிருப்பார்கள். சிலர் மோசமான ஒன்று தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்துவிடுமோ என்று வீணாக பயந்து கொண்டிருப்பார்கள். அனுதின வாழ்க்கையில், நாளைக்கு என்ன நடக்குமோ என்றும் எதிர்காலத்தில் தங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்குமோ என்றும் வருங்காலத்தைக் குறித்து கலங்கிக் கொண்டிருப்பார்கள். இப்படிபட்டதான கவலை தேவையற்றது. இயேசு கிறிஸ்து இப்படியாகச் சொல்லுகிறார்: **நாளைக்காக கவலைப்படாதிருங்கள். நாளையதினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்** (மத்தேயு *6:34*).

கர்த்தர் நம்மீது அன்பாயிருப்பதால் அவர் நமது தேவைகளையெல்லாம் சந்திப்பார். நமக்கு இன்னதுதேவை என்பதை அவர் அறிந்திருக்கிறார். நிச்சயமாகவே அவர் நம்மை கைவிடமாட்டார். நாம் வேண்டிக் கொள்வதற்கும், நினைப்பதற்கும் அதிகமாய் நமக்கு செய்ய வல்லவராயிருக்கிறார். ஏற்றவேளையில் நமக்கு கொடுப்பார். அதுவரை நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

**உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்** (சங்கீதம் *37:5*). நாம் தினமும் நம்முடைய எல்லா திட்டங்களையும், செய்யும் எல்லா வேலைகளையும் உள்ளார்ந்த ஈடுபாட்டோடு கர்த்தரிடம் தெரிவிக்க வேண்டும். பாரத்தை அவரிடம் கொடுத்துவிட்டு அவரையே சார்ந்திருக்கவேண்டும். அப்பொழுது அந்த காரியத்தை கர்த்தர் வெற்றியோடுகூட முடிக்கச் செய்வார். நாம் நம்மைத் தாழ்த்தி அவரை நம்பி அவருடைய சித்தத்தை மாத்திரம் செய்கிறவர்களாக இருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தை உண்மை என்பதை நம்பி, முழுஈடுபாட்டோடு அவரைத் தேடி, அவரைப் பின்பற்றி வாழவேண்டும். நம் சுயவிருப்பத்தின்படி நடக்காமல், கர்த்தருடைய சித்தத்தின்படி, அவரைச் சார்ந்து வாழ்வதையே தெரிந்து கொள்ளவேண்டும்.

**உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்** (நீதிமொழிகள் *16:3*). நாம் செய்கிற காரியங்களை வெற்றியோடு செய்துமுடிக்க கர்த்தருடைய உதவியை நாடவேண்டும். சிலர் தங்களுடைய வேலையை முழுமையாக கர்த்தரிடம் ஒப்படைக்காமல், மேலோட்டமாக ஒப்படைக்கிறார்கள். சிலர் தற்காலிகமாக கர்த்தருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்க விரும்புவார்கள். பின் மறுபடியும் அவர்களே அதை பொறுப்பெடுத்துச் செய்வார்கள். சிலர் கர்த்தரிடம்



எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்து விடுவார்கள். ஆனால், அந்த காரியத்தைச் செய்ய எந்தவிதமான முயற்சியும் எடுக்கமாட்டார்கள். சிலர் கர்த்தரிடம் சொல்லிவிட்டு தாங்களாகவே எல்லா காரியத்தையும் செய்து கொண்டிருப்பார்கள். நாம் செய்கிற அனைத்து காரியங்களிலும் கர்த்தரை நம்பியிருக்கவேண்டும். அவரைச் சார்ந்து வாழ வேண்டும்.

**ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை, அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்** (மத்தேயு *6:25-27*). நம்முடைய தேவைகளுக்காக நாம் கவலைப்படக்கூடாது. நம்முடைய தேவைகளையெல்லாம் சந்திப்பேன் என்று இயேசு கிறிஸ்து வாக்கு கொடுத்திருக்கிறார். நமக்கு இன்னது தேவை என்பதை கர்த்தர் அறிந்து வைத்திருக்கிறார். நிச்சயமாக அவற்றை சந்திப்பார். கர்த்தர் கொடுத்த வாக்கை நாம் விசுவாசித்து அதை சுதந்தரித்துக் கொள்ளவேண்டும்.

கவலைப்படுவதினால், நம் சரீரத்தில் மோசமான விளைவுகள் ஏற்படுகிறது. கவலை நம்மை சிந்திக்கவிடாமல் தடுக்கிறது. மனதிலுள்ள எண்ணங்களை பாதிக்கிறது. அன்றாடம் நம்மால் செய்யக்கூடிய அநேக காரியங்களை செய்யவிடாமல் தடுக்கிறது. எதிர்மறையான காரியங்களை சிந்திக்க வைக்கிறது. பின் அந்த எதிர்மறையான சிந்தனைகள் எதிர்மறையான வார்த்தைகளாக வெளிவருகிறது. தேவன்மேல் உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கிறது. இயல்பான முறையில் செயல்படுவதை தடுக்கிறது. கவலை மனச்சோர்வை கொண்டுவருகிறது. மகிழ்ச்சியோடு இல்லாமல் துக்கமுகத்தோடு இருக்கச் செய்கிறது.

கவலைப்படுவதினால் ஒரு பயனும் இல்லை. தீங்கைத்தான் உண்டாக்குகிறது. தேவனை அறியாதவர்கள்தான் வீணாக கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். உலகத்தின் தேவைகளுக்காக கவலைப்படுவார்கள். பறவைகள் விதைப்பதோ, அறுவடை செய்வதோ, நாளைக்கு வேண்டும் என்று களஞ்சியங்களில் சேமித்து வைப்பதோ இல்லை. அவைகள் கவலைப்படாமல் திருப்தியாக வாழுகின்றன. எதிர்காலத்தைப் பற்றி மனிதர்களைப்போல கவலைப்படுவதில்லை. தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நாம் விசேஷித்தவர்கள். நாம் எப்படி வாழ்வோம் என்று ஏன் கவலைப்பட வேண்டும்? எதிர்காலத்தைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், இன்றைக்கு செய்யவேண்டிய காரியங்களை கெடுக்கும். நமக்கு ஜீவனைக் கொடுத்த தேவனை, நம் வாழ்வின் எல்லா காலகட்டங்களிலும் விசுவாசிக்க

வேண்டும்.

ஆகையால், **என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்** (மத்தேயு 5:31,32). தேவனை அறிய வேண்டிய விதத்தில் அறியாத வர்களும், அவர் மேல் விசுவாசம் இல்லாதவர்களும்தான் கவலைப்படுவார்கள்.

முதலாவது **தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும்** (மத்தேயு 6:33). கவலையை மேற்கொள்ள தேவனுடைய சித்தத்தை செய்யவேண்டும். தேவனுடைய ராஜ்யத்துக்குள்ளே வரவேண்டும். தேவனுடைய ஆளுகையையும், அன்பையும் அங்கீகரிக்கும்போது, நம் கவலைகள், கலக்கங்கள் எல்லாம் மறைந்துபோகும். தேவனுடைய ராஜ்யத்தையும், நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்பும் நற்செயல்களைச் செய்தலையுமே நாம் நாட வேண்டும். தேவன் நம் தேவைகளை நிறைவேற்றுவார்.

**ஆகையால், நாளைக்காக கவலைப்படாதிருங்கள்; நாளையதினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்** (மத்தேயு 6:34). எளிய வேதாகமம் இப்படியாகக் கூறுகிறது: எனவே, நாளையைக் குறித்துக் கவலை கொள்ளாதீர்கள். ஒவ்வொரு நாளும் தொல்லை உண்டு. நாளைய கவலை நாளைக்கு. கவலையை வெல்ல ஒவ்வொருநாளும் தேவன் தரும் வாழ்வை அந்த ஒவ்வொரு நாளாக அனுபவிக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் திறமைகளை பயன்படுத்தி இன்றைய காரியங்களை மனப்பூர்வமாகச் செய்வோம்.

தேவனுடைய ராஜ்யத்தை தேட வேண்டும் என்பது, தேவனிடத்தில் திரும்பி, அவர் நமக்கு உதவி செய்யும்படி கேட்கவேண்டும். தேவனுடைய விருப்பத்தை அறிந்து நமது மனதின் எண்ணங்களில், அவருடைய விருப்பத்தால் நிரப்ப வேண்டும். அவருடைய குணநலன்களை உடையவர்களாக, அவரைப்போல நாம் உருவாக வேண்டும். எல்லா காரியங்களிலும் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். தேவனுடைய இடத்தில் நம்முடைய வேலையோ, தொழிலோ, படிப்போ, மனிதர்களோ, நம்முடைய குறிக்கோளோ, நம்முடைய தேவைகளோ, வாஞ்சை விருப்பங்களோ வந்துவிடக் கூடாது. கர்த்தருடைய சித்தத்தின்படி, அவருடைய வழிநடத்துதலின்படி எல்லாவற்றையும் செய்யவேண்டும்.

பயத்தினால் எதிர்மறையான காரியங்களை சிந்திக்கிறோம். கவலைப்படுவதினால் கர்த்தரை நம்புவதை விட்டுவிடுகிறோம். கர்த்தரோடுகூட உள்ள ஐக்கியத்தை இழந்துவிடுகிறோம்.





அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகக் கூறுகிறான்: **நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப் பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்** (பிலிப்பியர் 4:6,7). நாம் எல்லோருமே ஏதாவது ஒரு காரியத்தைக் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். வேலையைக் குறித்தோ, படிப்பைக் குறித்தோ, வீட்டுக்காரியங்களைக் குறித்தோ, வியாதியைக் குறித்தோ பயந்து கவலைப்படுகிறோம். கவலை வரும்போது, அதை ஜெபமாக மாற்றும்படி பவுல் கூறுகிறான். எப்பொழுதெல்லாம் கவலை வருகிறதோ, கவலைப்படுவதை நிறுத்திவிட்டு ஜெபிக்க ஆரம்பிக்க வேண்டும்.

நாம் எதைப்பற்றியும் கவலைப்படாமல்,நமக்கு வேண்டிய எல்லாவற்றிற்காகவும், ஜெபத்தில் தேவனிடத்தில் சொல்ல வேண்டும். ஜெபிக்கும்போதெல்லாம் தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும். அப்பொழுது தேவ சமாதானம், நம் இருதயத்தையும், மனதையும் பாதுகாக்கும். தேவன் கொடுக்கும் சமாதானம் உலகம் கொடுக்க முடியாத சமாதானமாகும். கர்த்தர் நமக்காக எல்லா காரியங்களையும் பொறுப்பெடுத்து நடத்துவார். அவருடைய கட்டுப்பாட்டுக்குள் எல்லாவற்றையும் வைத்திருக்கிறார். அவரை மீறி ஒன்றும் நடக்காது. காரியங்களை செய்ய வைக்கும் அதிகாரம் அவரிடத்தில் மட்டும் உள்ளது என்பதை அறிந்து கொண்டோமானால், சமாதானத்தோடு கூட இருப்போம். கவலைப்படமாட்டோம்.

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, உலகம் கொடுக்க முடியாத இந்த சமாதானத்தை பெற்றுக் கொள்ளலாம். இந்த சமாதானத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும் (லூக்கா 11:13). **சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை; உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக** (யோவான் 14:27). ஆமென்!




பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஜெபிக்கும்போது, தானியேலுக்கும், யோசேப்புக்கும், சாலொமோனுக்கும் கொடுத்ததுபோல இவர்களுக்கும் ஞானத்தைத் தாரும் என்று கர்த்தரை நோக்கி ஜெபிக்கலாம். ஏனென்றால், அவர்கள் பிரதானமாய் செய்வது, படிப்பதுதான். அதற்குத் தேவை ஞானம்தான்.

அநேகம் பிள்ளைகள், படிப்பில் அதிகக் கவனம் செலுத்தாமல் இருப்பார்கள். படிப்பின் முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பார்கள். அதற்கான மனப்பக்குவம் இல்லாமல் இருப்பார்கள். இவற்றைப்பற்றியெல்லாம் யோசிக்கவே மாட்டார்கள். இவற்றுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். அந்தப் பிள்ளைகளுக்கு படிப்பில் ஆர்வம் ஏற்படவும், படிப்பு வாழ்க்கைக்கு எவ்வளவு அவசியம் என்பதை உணரவும், யோசிக்கவும் தக்கதான ஞானத்தை கர்த்தர் அந்தப் பிள்ளைகளுக்குத் தர நாம் ஜெபிக்க வேண்டும்.

அவர்களுடைய சரீர சுகத்திற்காக ஜெபிக்கவேண்டும். பிள்ளைகளின் படிப்பிற்கு சுகவீனம் ஒரு தடையாக இருந்துவிடக்கூடாது. ஒருவேளை சுகவீனமாய் இருந்தால், அதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். யெகோவா ரொஃபேகா, நானே உன் பரிகாரி, பரம வைத்தியர் என்று சொல்லியிருக்கிறீர், இயேசய்யா, உம்முடைய காயம்பட்டத் தழும்புள்ள கரங்களால் இந்தப் பிள்ளைகளைத் தொட்டு சுகப்படுத்துமய்யா. எப்பேர்ப்பட்ட வியாதியையும் சுகப்படுத்த உம்மால் முடியும். வாதை உன் கூடாரத்தை அணுகாது என்று சொல்லியிருக்கிறீர், அந்த வார்த்தைக்குள் இருக்கும் ஆசீர்வாதம் இந்தப் பிள்ளைகளுக்குக் கடந்து வரட்டும். உம்முடைய சுகமளிக்கும் வல்லமை இந்தப் பிள்ளைகள் மீது கடந்து வரட்டும், உச்சி முதல் உள்ளங்கால்வரை கடந்து வரட்டும், சுகப்படுத்தும் என்று கர்த்தரை நோக்கி நாம் ஜெபிக்கலாம்.

பிள்ளைகள், கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் அனுதினமும் வளர நாம் ஜெபிக்க வேண்டும். வேதத்தை வாசிக்க வேண்டும், எப்போதும் தங்கள் உள்ளத்திலே கர்த்தரை ஸ்தோத்திரிக்க வேண்டும். இதற்காக



ஜெபிக்கவேண்டும். பிள்ளைகள் எப்போதும் தேவ பிரசன்னத்தில் இருக்க ஜெபிக்க வேண்டும். அவர்களுடைய போக்கிலும், வரத்திலும் கர்த்தர் தம்முடைய தூதர்களைக் கொண்டு பாதுகாக்கும்படி நாம் ஜெபிக்க வேண்டும். பிள்ளைகள் ஜெபிக்கிறவர்களாக இருக்கும்படி கர்த்தரை நோக்கி நாம் ஜெபிக்க வேண்டும். நெகேமியாவைப்போல ஒவ்வொரு காரியத்தைச் செய்யும் முன்பாக கர்த்தரிடம் ஜெபித்துவிட்டு செய்யும்படியான பழக்கமுள்ளவர்களாக இருக்கும்படி ஜெபிக்கவேண்டும்.

எப்போதும் கர்த்தர் தங்களோடுகூட இருக்கிறார், அவருடைய செட்டைகளுக்குள்ளாக தங்களை மூடி மறைத்து பாதுகாத்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வு பிள்ளைகளுக்குள் இருக்கும்படி ஜெபிக்க வேண்டும். அதை பிள்ளைகளுக்கு நாம் ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொடுக்கவேண்டும். பிள்ளைகள் பயப்படக்கூடாது. எச்சரிக்கையாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும். அது அவசியம். ஆனால், பயப்படக்கூடாது. எப்படிப்பட்ட சூழ்நிலையில், எப்படிப்பட்ட மனிதர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் அதற்கானக் காரணங்களையும் பிள்ளைகளுக்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். நமது குடும்ப ஜெபத்தில் இதற்காக நாம் கருத்தாய் ஜெபிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு வேதத்தின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும். அனுதினமும் வேதத்தைப் படிக்க அவர்களைப் பழக்குவிக்க வேண்டும். பிள்ளைகளை சிறுபிராய முதலே வேதத்தின் வசனங்களை மனப்பாடம் செய்யவைக்க வேண்டும். அப்படி அவர்கள் வசனங்களை மனப்பாடம் செய்யும் போது, அது அவர்கள் உள்ளத்தில் பதிந்துவிடும். அந்த வார்த்தை அவர்களுடைய மனசாட்சியை பலப்படுத்தும். கர்த்தரைக் குறித்த உணர்வைத் தரும். தீமைக்கு அவர்களை விலக்கி, பாதுகாக்கும். பிள்ளைகள் வார்த்தையின்படி நடப்பார்கள். நல்லது எது, கெட்டது எது என்பதைப் பகுத்துப் பார்க்க வார்த்தை அவர்களுக்கு உதவும். மற்ற மனிதர்களின் தவறான ஆலோசனைகளை இனங்கண்டுகொள்ள வார்த்தை அவர்களுக்கு உதவும்.

பிள்ளைகள் ஜெபிக்கும்போதும், வேதத்தின் வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கவேண்டும். அப்படி ஜெபிப்பதே அவர்களுடைய விசுவாசத்தை பலப்படுத்தும். எந்த சூழ்நிலையிலும் தடுமாறாமல், கர்த்தரையே சார்ந்து இருப்பார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தரையே நம்பியிருப்பார்கள் இதுவே அவர்களுக்கு ஆசீர்வாதமாகும் (எரேமியா 17:5-8).

யோசேப்பை, தாவீதை, தானியேலை கர்த்தர் எப்படியெல்லாம் வழிநடத்தினார், உயர்த்தினார், ஆசீர்வதித்தார் என்பதை விளக்கமாக பிள்ளைகளுக்கு நாம் சொல்லிக் கொடுக்கவேண்டும். முக்கியமாக அவர்களுக்கு நேரிட்ட சூழ்நிலைகளைப் பற்றியும் கர்த்தர் ஏன் அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அனுமதித்தார், அதற்கானக் காரணங்கள், நோக்கங்கள் என்ன என்பதை மிகவும்

விளக்கமாக சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்பொழுது, பிள்ளைகள் தங்களுக்கு ஏற்படும் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளவும், அதற்கேற்ப நடந்து கொள்ளவும் அது உதவியாயிருக்கும். ஜெபக் கூட்டங்கள் மற்றும் சபை ஆராதனைகளில் கலந்து கொண்ட பிறகும், பிள்ளைகளிடம் நாம், அங்கு அவர்கள் பெற்றுக் கொண்ட கர்த்தருடைய வார்த்தை என்ன என்பதையும், அதிலிருந்து அவர்கள் என்ன காரியத்தைப் புரிந்து கொண்டார்கள் என்பதையும் கேட்டு விசாரிக்க வேண்டும். இது அவர்களுடைய மனதையும், உள்ளத்தையும் (ஆவி) பலப்படுத்தும். அவர்களுடைய யோசிக்கும் திறன் பலப்படும். கர்த்தரைக்குறித்த உணர்வு அவர்களுடைய உள்ளத்தை ஆட்கொள்ளும். கர்த்தரை நெருங்கி ஜீவிக்க ஆரம்பிப்பார்கள். எந்த சூழ்நிலையிலும் தாங்களாக சுயமாகவோ அல்லது மற்ற மனுஷர்களுடைய யோசனையின்படியோ நடவாமல், கர்த்தருடைய வார்த்தை சொல்லுவதின்படியே நடப்பார்கள். இது அவர்களுக்கு மிகவும் பாதுகாப்பாகும்.

சாப்பிடுவதற்கு முன்பாக, படிப்பதற்கு முன்பாக, பள்ளிக்கு செல்வதற்கு முன்பாக, ஜெபிக்கவேண்டும் என்பதையும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதையும் பிள்ளைகளுக்கு நாம் கற்றுக்கொடுக்க வேண்டும்.

அதேபோல, ஒவ்வொரு காரியமும் நடந்து முடிந்தபிறகு, அதை நடத்திக் கொடுத்தக் கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டுமென்பதையும் பிள்ளைகளுக்கு நாம் கற்றுக் கொடுத்து, அந்தப் பழக்கத்திற்குள்ளாக அவர்களைக் கொண்டுவரவேண்டும். அப்படி செய்தால், முதிர்வயதிலும் அதை விடாதிருப்பார்கள். இதைத்தான் வேதம் இப்படியாகச் சொல்லுகிறது: **பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்** (நீதிமொழிகள் 22:6). ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது என்று சொல்லுவார்கள். ஐந்து வயதில் கீழ்ப்படிந்து நடக்காத பிள்ளை, தன்னுடைய ஐம்பதாவது வயதிலும் கீழ்ப்படியாது என்பதே இதன் அர்த்தமாகும். அதினால் பிள்ளைகளை சிறு பிராயத்திலேயே வேதத்தின் வார்த்தையின்படி நடக்க பழக்கவேண்டும். தங்கள் இஷ்டம்போல நடக்கவிடக் கூடாது. பெற்றோர், பிள்ளைகளை கண்டித்து வளர்க்க வேண்டும். பிள்ளைகளை ஒழுக்கமாய் வளர்க்க வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். **பிரம்பும் கடிந்து கொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்** (நீதிமொழிகள் 29:15) என்று வேதம் சொல்லுகிறது.

பரலோகத்தைக் குறித்தும், இந்த உலகத்தைக் குறித்தும் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்பொழுது தாங்கள் எப்படிப்பட்டதொரு வாழ்க்கையை வாழ வேண்டும், தங்களது நடத்தை எப்படி இருக்கவேண்டும் என்ற தெளிவு பிள்ளைகளுக்கு உண்டாகும். நரகத்தை கர்த்தர் எதற்காக உண்டாக்கியிருக்கிறார், அது யாருக்கு, எப்படிப்பட்ட நடத்தை உள்ளவர்கள், அதில் போய் சேர்வார்கள் என்பதையும் பிள்ளைகளுக்கு விளக்கமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இந்த உலகத்தில், அனுதின வாழ்க்கையில் சாத்தான் எப்படி நம்மை சோதனைக்குட்படுத்துவான், அவனுடைய கண்ணி, தந்திரம் பற்றி



யெல்லாம் பிள்ளைகளுக்கு வேதத்தின் வார்த்தைகளை அடிப்படையாக, ஆதாரமாக வைத்து சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்பொழுது பிள்ளைகள் அவற்றிலிருந்து தங்களை விலக்கி பாதுகாத்துக்கொள்ள அது உதவியாக இருக்கும்.

வயதில் மூத்தவர்களுக்கு மரியாதை கொடுக்க பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். உடை உடுத்துவதைப் பற்றியும் கற்றுக் கொடுக்க வேண்டும். நாகரீகம் என்று சொல்லி, அரைகுறையாக உடுத்திவிடக்கூடாது. பொது இடங்களிலும், மற்ற இடங்களிலும் எப்படி நடை, உடை, பேச்சு இருக்க வேண்டுமென்பதைக் கற்றுக் கொடுக்கவேண்டும்.

அவர்களுடைய நண்பர்கள் யார், எப்படிப்பட்ட பழக்க வழக்கம் உள்ளவர்கள் என்பதை கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். இதில் பெற்றோர் கவனமாய், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அவர்களினிமித்தம் பிள்ளைகளுடைய பேச்சு, நடத்தை கெட்டு போய்விடக்கூடாது.

இந்தப் பிள்ளைகள் கர்த்தர் நமக்கு கொடுத்தது (சங்கீதம் 127:4) அவர்களை சரியானபடி வளர்க்க வேண்டியது பெற்றோர்களுடைய பொறுப்பு.

பெற்றோர், பிள்ளைகளுடன் ஒரு நண்பனைப்போல பழக வேண்டும். அப்பொழுதுதான் அவர்களும் தங்களுடைய எல்லாக் காரியங்களையும் பெற்றோருடன் பகிர்ந்து கொள்வார்கள். ஒளிவு, மறைவு இருக்கக்கூடாது. கண்டிப்பாய் இருக்க வேண்டிய நேரத்தில், பெற்றோர் கண்டிப்பாய் இருக்க வேண்டும்.

விளையாடவே கூடாது, டி.வி.யே பார்க்கக் கூடாது. எப்போதும் படி, படி என்று சொல்லி பிள்ளைகளை நடத்தக்கூடாது. எப்போது, எவ்வளவு நேரம் விளையாடலாம், டி.வி. பார்க்கலாம் என்பதை அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். படிக்கும்போதும், பெற்றோர் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். தங்களால் சொல்லிக் கொடுக்க முடியாததை சொல்லிக் கொடுக்க டியூசனுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் படிப்பு விஷயத்தில் பெற்றோர் சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதில் குறை வைக்கக்கூடாது. ஒவ்வொரு நாளும் அவர்களுடைய படிப்பின் காரியத்தை கவனிக்க வேண்டும். படிப்பில் குறை வந்துவிடக்கூடாது.

பிள்ளைகள் எப்படிப்பட்ட படிப்பில் ஆர்வத்துடன், ஈடுபாட்டுடன் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அப்படிப்பட்ட வழியில் அவர்களை நடத்திச் செல்ல வேண்டும். மற்றவர்கள் நம்மை உயர்வாக பார்க்க வேண்டும், மதிக்க வேண்டுமென்பதற்காகப் பிள்ளைகளைப் படிக்க வைக்கக்கூடாது. மற்றப் பிள்ளைகளோடு நம்முடைய பிள்ளைகளை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. மற்ற பிள்ளைகளுக்கு முன்பாக பிள்ளைகளை கண்டிக்கவோ, தண்டிக்கவோ கூடாது. மற்றவர்களுக்கு முன்பாக பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிட்டு பேசக் கூடாது. இது பிள்ளைகளுக்கு மன மேட்டிமையை அல்லது தாழ்வு மனப்பான்மையைக் கொண்டுவந்துவிடும். அது பிள்ளைகளின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

# கர்த்தரின் ஞானமும் வாழ்க்கையின் பரிபூரணமும்



- பால்ராஜ் கென்னடி

ஒருவன், திருமணம் செய்து கொண்டு மனைவியோடு சேர்ந்து வாழ்கின்றான். மற்றொருவன், திருமணம் செய்துகொள்ள விரும்பாமல் தனித்து வாழ்கின்றான். இன்னோருவன் திருமணம் செய்து கொள்ள விரும்பியும் வாய்க்காமல் போகிறது. ஒருவனுக்கு, குழந்தை உள்ளது. இன்னொருவனுக்கு குழந்தை இல்லை. ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்டக் காரியம் மிகவும் பிடித்திருக்கிறது. அதே காரியம் மற்றொருவனுக்கு பிடிக்காமல் போகிறது. ஒருவன் எல்லாக் காரியத்திலேயும் நிதானமாக இருக்கிறான். மற்றொருவன் வேகமாக இருக்கிறான். ஒருவன், கஷ்டமான காரியத்தையும் இலகுவாக செய்யலாம் என்று நம்புகின்றான். மற்றொருவன் இலகுவான காரியத்தையும் கஷ்டம் என்று நினைக்கிறான். ஒருவன் எல்லோருடனும் சேர்ந்து இருக்க ஆசைப்படுகிறான். மற்றொருவன், தனித்து இருக்க விரும்புகிறான்.

ஏன் காரியங்கள் இப்படி எதிரும் புதிருமாக உள்ளது? கர்த்தரின் படைப்பு அது. ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு விதத்தில் உருவாக்கியுள்ளார் என்பது பொதுவான பதில். இதை சற்றே ஆழமாக யோசித்தும், தியானித்தும் பார்க்க வேண்டும்.

முதலாவது, இதற்கு எதிராகக் காரியங்கள் இருந்தால் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். எல்லா மனுஷர்களுக்கும் ஒரே ஜாடை, ஒரே விதமான ரசனை, ஒரே விதமான விருப்பங்கள், ஒரேவிதமான வெறுப்புகள் என்றிருந்தால் ஒரே மனுஷன் இந்த உலகத்தில் வாழ்ந்தது போல் இருக்கும். அதற்கு கர்த்தரே இந்த உலகத்தில் ஒரு மனிதனாய் வாழ்ந்துவிட்டு போகலாம். இத்தனை கோடி மனிதர்களை அவர் உருவாக்கத் தேவையில்லை, அவசியமுமில்லை.

கர்த்தர், ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் வெவ்வேறுவிதமான திருப்தியை வைத்துள்ளார். அதற்கேற்ப இந்த உலகத்தை உருவாக்கியுள்ளார். நாம் அவற்றை எல்லாம் அனுபவிப்பதை அவர் விரும்புகிறார். சிருஷ்டியை நேசிக்கும் சிருஷ்டிகர் அவர். திருப்தி, அனுபவிப்பது இந்த இரண்டையும் அவரே உருவாக்கியுள்ளார். அவருக்கு விருப்பு, வெறுப்பு, திருப்தி, அனுபவம் என்று உண்டு. அவருடைய பார்வையில் இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது, இதை நாம் புரிந்து கொள்ளலாம். நம்மை உருவாக்கி நம்மில் அன்பு கூருகிறார். அதேபோல நாமும் அவரை நேசிக்க விரும்புகிறார். மற்றவர்களிடத்தில் நாம் அன்புகூர விரும்புகிறார். இதுவே அவரது படைப்பின் நோக்கம். இந்த அன்பை மையமாக, அஸ்திபாரமாக வைத்து வாழும்போதுதான், அனுபவிப்பதும், திருப்தியும் மனிதனுக்கு சரியானபடி கிடைக்கும். இதுவே இவையெல்லாவற்றிற்கும் பின்பாக உள்ள இரகசியம்.

மனிதன், தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற தோல்விகள், இழப்புகள், சோர்வுகளை ஏமாற்றங்களை வைத்து, தான் வாழ்க்கையை இழந்து விட்டதாக நினைக்கிறான். அதனால் தான் தன்னையே கொலை செய்து கொள்கின்றான். இவையெல்லாம் நிரந்தரமானவை அல்ல, தற்காலிகமானதாகும். அவன் தன்னுடைய வாழ்க்கையை முழுமையாகப் பார்க்கவில்லை. வாழ்க்கையின் ஒரு பகுதியை மட்டுமே பார்த்து, முழு வாழ்க்கையையும் கணிக்கின்றான். அதற்காகத்தான் கர்த்தர், நேற்று, இன்று, நாளை என்று வைத்துள்ளார். அதற்காகவே, அதாவது மனிதன் வாழ வேண்டுமென்பதற்காகவே ஒவ்வொரு நாளையும் புதிது புதிதாக வைத்துள்ளார். கர்த்தர் எதிர்காலத்தை மறைத்து வைப்பதற்கே அதற்காகத்தான். மனிதன் வாழ்க்கையை வாழ்ந்து, அதாவது அனுபவித்து வாழவே, இடம், காலம் என்று வகை வகையாக சிருஷ்டித்துள்ளார். மனிதர்களாகிய நமக்கு அவர் நல்லதையே சிருஷ்டித்துள்ளார். இவையெல்லாவற்றிலும் மேலானது, நமக்கு அவர் கொடுத்திருக்கும் சுயாதீனமே. அவர் நம்மை ஒருபோதும் ஒன்றை செய்வதற்கும் செய்யாமலிருப்பதற்கும் வற்புறுத்துவதில்லை. சகலத்தையும் நம் கண்முன்பு வைத்திருக்கிறார். இதை அனுபவிக்க முழு உரிமையையும், சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறார். இவையெல்லாவற்றையும் குறித்து நமக்கு எழுதியும் கொடுத்திருக்கிறார். அவரோடு நாம் உறவு கொள்வதுகூட நம் கரத்தில்தான் இருக்கிறது. அதையும் கூட அவர் வற்புறுத்தவோ, கட்டளையிடவோ இல்லை.

கர்த்தருடைய ஞானம் ஒப்பற்றது. அதை மனிதனால் எளிதாக அறிந்து கொள்ள முடியாது (ரோமர் *11:33*).


**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**



**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா